**ARTICLE 02 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00039**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 6–10
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# தென் மாவட்ட நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவமுறை

**முனைவர்.கௌசல்யா கு**[1,*]

[1]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை - ஆய்வுமையம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.கௌசல்யா கு — veeralakshmiv806@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நாட்டுப்புறவியல் என்பது தமிழ்த்துறையில் வளர்ந்து வரும் ஒரு மிகப்பெரிய துறையாக அமைந்துள்ளது. நாட்டுப்புற இலக்கியம் என்பது நாட்டுப்புறப் பழக்கவழக்கங்கள், நாட்டுப்புற கலைகள், நாட்டுப்புற அறிவியல், தொழில் நுட்பம், என்னும் நான்கு பெரும் பிரிவுகள் உள்ள நிலையில் மக்கள் வாழ்வியலுடன் இணைந்த மருத்துவமும் நாட்டுப்புறவியலின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. வீட்டில் நாம் தினம் தோறும் பயன்படுத்தும் உணவுமுறைகளைக் கூட நம் முன்னோர்கள் எவ்வாறு மருந்தாகப் பயன்படுத்தினர் என்பதையும், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், மஞ்சள்தூள் முதலிய பொருட்களையே நாட்டுப்புற மக்கள் மருந்தாகவும் நோய்களுக்குரிய தீர்வாகவும் எடுத்துக்கொண்டனர். இவை மட்டுமல்லாமல் கிராமத்தில் கிடைக்கக்கூடிய வேர்கள், வயல்வெளியில் உள்ள சிறுசெடிகளை ஒன்று திரட்டி மக்களுக்கு நோய் தீர்க்கும் மருந்தாய் பயன்படுத்தினர். நாட்டுப்புற மக்கள் மரபு வழியாகவும், செவிபுலன் வழியே கேட்ட செய்திகளையும் தம்முடைய மருத்துவ முறையில் பயன்படுத்தி பயன் அடைந்து வந்தனர்.

**Keywords / திறவுச் சொற்கள்:** அறிவியல் 2. தொழில்நுட்பம் 3. மருத்துவமுறை 4. இலக்கண நூல் - தொல்காப்பியம் 5. பத்துப்பாட்டு நூல் - பட்டினப்பாலை; பதினெண்கீழ்கணக்கு நூல் - பழமொழிநானூறு; மருத்துவமுறைகள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கு, மு. (2026). தென் மாவட்ட நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவமுறை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

ஒவ்வொரு மனிதச் சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ள. அதனைச் சமூக நிறுவனம் என்றே கூறலாம். நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாததாயும். நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பர். இவற்றை “கை வைத்தியம், நாட்டுவைத்தியம் பாட்டிவைத்தியம், மூலிகைமருத்துவம், வீட்டுவைத்தியம், இயற்கைவைத்தியம் என்றெல்லாம்” கூறுவார். (ETHNO MEDICINE, FOLK MEDICINE, POPULAR MEDICINE, POPULAR HEALTH CULTURE, ETC.,) மிகப் பழமையான மருத்துவமுறை என்று ஆயூர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவார். நாட்டுப்புற மருத்துவம் வேதகாலத்திலேயே நடைமுறையில் இருந்தது.

## மக்களிடம் நிலவும் மருத்துவமுறை

நாட்டுப்புற மருத்துவமுறை பற்றி இந்திய நாட்டில் விரிந்த ஆய்வுமேற்கொள்ளப்படவில்லை. பழங்குடிகளை ஆராய்ந்து மேலைநாட்டு மானிடவியலறிஞர்கள் நாட்டுப்புற மருத்துவம் பற்றிச் சில குறிப்புகளை எழுதியுள்ளனார். இம்மருத்துவமுறை கிராமப்புற மக்களின் பண்பாட்டோடும், பழக்கவழக்கத்தோடும் சமூகஅமைப்போடும் பின்னிப்பிணைந்துள்ளது. அவர்களது நம்பிகைக் கேற்ப நவீன மருத்துவமுறைகளையும் மேற்கொள்கின்றனர். பழங்குடிமக்களிடையேயும் நாட்டுப்புற மருத்துவம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## வீட்டு வைத்தியம்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்ீ’ என நம் முன்னோர்கள் மிகப் பெரிய செல்வமாக கருதி வந்தனர். தொல்காப்பியம் பெரியோர்கள் வாழத்தும் முறைப்பற்றி ஒரு நூற்பாவில் உரைத்துள்ளமையை,

“வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பு கடுகும் போல வெஞ்சொல்”

வாய் என்பது வாய்மொழி, உறை என்பது மருந்து இலக்கண நூலார் தம் வாய்மொழி சொல் கூட பிறர் மனதை குணப்படுத்தும் மருந்தென்று உரைத்துள்ளார் சங்க இலக்கிய நூல்களும் மிளகு மருத்துவப் பொருளாக பயன்படுத்தப்பட்டமையும் அதன் ஏற்றுமதி முக்கயத்துவத்தையும் உரைத்துள்ளது. பட்டினப்பாலையில்,

“காலில் வந்த கருங்கறி மூடை” (பட்டினப்பாலை – 186)

கடியலூர் உருத்திரங்கண்ணனார் மரக்கலன்கள் வழியே வந்து இறக்குமதியானவை எவை என்ற பாடலில் தரப்படுகின்றன.

பதினெண்கீழ் கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடும் சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் மருத்துவக் குணங்’களை எடுத்துரைக்கின்றது. திரி என்பது மூன்று என்றும், கடுகம் என்பது காரம் என்றும் பெயர் பெறும். சுக்கு, மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்றவை வீட்டுப் புழக்கத்திற்கான பொருள்கள். இவை நோய்களைத்தீர்க்கும் மருத்துவகுணம் பெற்றவையாகவும் திகழ்கின்றன. வீட்டுச் சமையலுக்கான பயன்பாட்டுப் பொருள்களே மருந்துகளாகி நோய்களைப் போக்க உதவியதால் இது வீட்டுவைத்தியம் எனப் பெயர்பெற்றது. தங்களது அனுபவத்தின் அடிப்படையில் செய்திருக்கும் மருத்துவம் வீட்டுவைத்தியமாகும்.

## பரம்பரை வைத்தியம்

தந்தை மகனுக்குச் சொல்ல, மகன் அவன் மகனுக்குச் சொல்ல ஒருதலைமுறை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொன்னத் தொழில் முறையான மருத்துவமுறை பரம்பரைவைத்தியம் ஆகும்.

## இயற்கை வைத்தியம்

ஒவ்வொரு மனிதனிடமும் நோய் வராமல் தடுக்கும் சக்தியும், நோய்வந்தால் அதனைத் தடுக்கும் சக்தியும் இயற்கையாகவே அமைந்துள்ளது. இது இயற்கைமருத்துவம் ஆகும்.

## மூலிகைவைத்தியம்

நோய் வாய்ப்பட்டவர்களுக்கு அவர் விரும்பியதெல்லாம் மருந்தாய் கொடுக்காமல் நோய்க்குரிய மருந்தை ஆராய்ந்து கொடுப்பர். அவ்வாறு கொடுப்பவரை 'அறவோன்' என்றழைப்பர். பழமொழி நானூறு நூலில் புழைக்கடை பச்சிலை பற்றி ஒரு பாடல் உள்ளது.

"அல்லல் ஒருவர்க்கு அடைந்தகால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார் - நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்குமதுவே
மனைமரம் ஆய மருந்து" (ப.மொ.நா : 53)

ஒருவனுக்கு துன்பம் வரும் போது உற்றார் அந்த துன்பத்தை நீக்கி அவ்வீட்டின் பச்சிலை மரம் போலவர். பழந்தமிழர்கள் மூலிகைகளைக் கொண்ட "ஆயர்வேதம்' என்னும் மருத்துவ முறையை இளங்கோவடிகளும் உரைத்துள்ளார் என்பதனை தாமோதரன், மருத்துவன், நல்லச்சுதனார் என்ற பெயர் முறையிட்டு அழைப்பதை அறியமுடிகின்றது.

மருத்துவ குணங்கள் அடங்கிய செடி, கொடி, வேர், தாவரவகைகளைக் கொண்டு நோய்களைப் போக்கும் மருத்துமுறை மூலிகை வைத்தியம் ஆகும்.

## கை வைத்தியம்

நாட்டுவைத்திய முறைகளில் கைப்பக்குவம் என்பது முக்கிய இடம் பெறுகிறது. மருந்துப் பொருள்களை இடிப்பதும் அரைப்பதும், மருத்துவச் செயல்களாகக் கொண்டு இருந்தனர். இடித்து அரைத்து மருந்துகளின் சீரான தன்மைமையைக் கைவிரல்களால் தொட்டுதடவிப் பார்த்து அதன் பக்குவம் அறியப்படுகிறது. மருந்தின் அளவை ஒருகைப்பிடி அல்லது ஒருசிட்டிகை என்று சொல்லும் போக்கு ஒவ்வொரு கிராமங்களல் உண்டு. மருந்தைப் பதம்பார்க்க கைப்பக்குவம் பயன்படுவதால் நாட்டுமருத்துவத்திற்குக் கை வைத்தியம் எனப் பெயர் வந்தது. தனக்கு வந்தநோயைத் தானே போக்கிக் கொள்வதற்குக் கை வைத்தியமே ஒருமுக்கியப் பங்காக அமைகிறது.

## பச்சிலை வைத்தியம்

செடிவகையைச் சார்ந்த ஒருவகை மூலிகை பச்சிலை எனப்படும். தாவரத்தின் இலைகள் நல்லமணத்துடன் கசக்கினால் சாறு வரக்கூடியதாக இருக்கும். இதன் இலைகளும், விதைகளும், மருத்துவகுணமுடையவையாகச் சொல்லப்படுகிறது. துலைவலி, இருமல் போன்ற நோய்களுக்குப் பச்சிலை நல்லமருந்தாகப் பயன்படுகிறது. நோய்களைத் தீர்ப்பதால் இதற்குப் பச்சிலைவைத்தியம் என்றுபெயர் வந்தது.

எ.கா
அம்மை : வேப்ப இலைமீதுபடுக்கச் செய்தல்
காதுவலி : சுரைக்காய் இலைச் சாற்றைக் கசக்கிக் காதில் விடுதல்.

முதுகுவலி : புளியந் தழையையொட்டுதல்.

## இராஜ வைத்தியம்

மன்னர்கள் காலத்தில் மன்னனுக்கு மருத்துவம் பார்க்கும் அரண்மனை மருத்துவர் இராஜ வைத்தியர் என்றழைக்கப்பட்டார். புகழ்பெற்ற மருத்துவர் அவிசென்னா அரபி மன்னரின் அரச வைமருத்துவராக 16வது வயதில் நியமிக்கப்பட்டார் என்னும் செய்தி மூலம் அக்காலத்தில் அரண்மனை மருத்துவர்களின் முக்கியத்துவம் தெளிவாகிறது. அரசரின் நோய் தீர்க்கும் மருத்துவர் எடுத்துக்கொள்ளும் பெரும் முயற்சியையும் மருத்துவத்திற்கு உண்டாகும் பெரும் பொருள் செலவையும் மனதிற் கொள்ளும் மருத்துவமுறை இராஜ வைத்தியமாகும்.

## இரகசிய மருத்துவம்

நோயைக் குணமாக்கும் மருந்து மற்றும் அந்த மருத்துவ முறைகளை வெளியில் சொல்லாமல் தொழில் முறையில் செய்து வரும் மருத்துவமுறை இரகசியமருத்துவ முறையாகும்.

## பாட்டிவைத்தியம்

“உணவேமருந்து” என்பது அனுபவமொழி. சுக்கு, மிளகு, இஞ்சி, மஞ்கள், கீரை வகைகள் ஆகியவை மருத்துவ குணங்கள் மிக்கவையாகக் கருதப்படுகிறது. காலங்காலமாக வீட்டின் உணவுக் கூடங்கள் பெண்களின் பொறுப்பில் இருந்து வருவதால் இம்மருத்துவப் பயன்பாடுகளைப் பெரிதும் அவர்கள் அரிந்திருப்பார்கள்.

உணவு வகைகள் பலகுழந்தைகளுக்கு ஒத்துக் கொள்ளும். சிலரின் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். இவற்றை அருகிலிருந்து பார்த்துத் தம் பட்டறிவால் அதனைச் சரிசெய்ய முயல்வதில் தாயே முதலிடம் வகிக்கிறாள். இதுவே பழக்கவழக்கமானது எனவே இதற்குப் பாட்டிவைத்தியம் எனப் பெயர் வந்திருக்கலாம்.

ஒருநோயை குணப்படுத்துவதற்கு அக்காலத்தில் மரப்பட்டைகள், உணவுப்பொருட்கள், பச்சிலைகள், வேர்கள், கசாயம், காய்கள், கனிகள், செடிகள், தாவரக் கொழுந்துகள், தாவரங்களின் (பால்), பழங்கள், கீரைகள் போன்றவைப் பயன்படுத்தப்பட்டன. சிறுகுழந்தைகளில் இருந்து பெரியவர்கள் வரையும் இம்மருத்துவ முறையைப் பயன்படுத்தி நோய்களை குணப்படுத்தி வருவதுண்டு.

## முடிவுரை

கிராமமக்கள் நம்பிக்னை சார்ந்த மருத்துவத்தையும் பயன்படுத்துவது உண்டு. மருத்துவர் கூறும் மந்திரங்களைவெளியில் சொன்னால் நோய் குணமடையாது (பலிக்காது) என்றுகுறிப்பிடுவதும் உண்டு. அவர்கள் பயன்படுத்தும் மந்திரங்களை வேறுயாவரும் பயன்படுத்தமுடியாது. அவர் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு மட்டுமே இம்மந்திரம் சொல்லிக் கொடுக்கப்படும். இம்மருத்துவதைப் பரம்பரை மருத்துவம் என்று குறிப்பிடுகின்றனர்.

இன்றைய காலக்கட்டத்தில் ஆங்கில மருத்தும் அளவு கடந்து இருந்தாலும் சில மலைவாழ் மக்களும்,கிராமமக்களும்,கிராமமக்களும் இவ்வகையான நாட்டுமருத்துவத்தைக் கைவிடுவதில்லை.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## துணைநூற் பட்டியல் (References)

1. நாட்டுப்புற மருத்துவம் ஓர் ஆய்வு – சக்திவேல்.சு, 2006, மணிவாசகர் பதிப்பகம்.
2. நாட்டுமருத்துவம் - சந்திரன் .ந, 2001. பாரதியார் பல்கலைகழகம், கோயம்புத்தூர்.

© 2026 முனைவர்.கௌசல்யா கு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..